மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தமிழ்செல்வன் | நாள் | 26.07.2022 |
| தகப்பனார் பெயர் | வரதராஜன் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

13) நான் என் தரப்பில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை பத்திரத்தில் மாரிமுத்து கவுண்டரின் முதல் மனைவியின் பெண் வாரிசுகளையும், 2 வது மனைவியின் பெண் வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்க்காததால் மேற்படி பாகபிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

14) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.2 ம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோராத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்று சொன்னால், சரியல்ல.

15) வழக்குரையின் சொத்து விவரத்தில் உள்ள சர்வே எண்.362/2 மற்றும் சர்வே எண்.362/3 ஆகியவற்றில் ஏதேனும் வீடு உள்ளது என கண்டுள்ளதா என்றால், இல்லை. அவ்வாறு சொத்து விவரத்தில் வீடு எதுவும் குறிப்பிடப்படாத நிலையில் வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின்கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகிய ஆவணங்கள் நான் வழக்கிற்காக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி ஆவணங்களை தயாரித்து நான் சுவாதீனத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

16) தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை என் பாட்டி லட்சுமி அம்மாள் கடந்த 1964 ம் ஆண்டு 1ம் பிரதிவாதியின் தந்தையான மாரிமுத்து கவுண்டர் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கியுள்ளார் என்று சொன்னால், சரிதான். மேற்படி கிரய சொத்திலும் 1ம் பிரதிவாதிக்கு பங்கு உள்ளது என கூறி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.9/2013 என்ற பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நடந்து வருகிறது அந்த வழக்கின் வழக்குரையை என் தரப்பில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

17) என் திருத்தப்பட்ட வழக்குரையில் 5ம் பக்கத்தில், 8 வது பத்தியில் 11.07.1964 –ம் தேதி லட்சுமியம்மாள், மாரிமுத்து மற்றும் அவரது தாயார் பெருமாள் அம்மாளிடமிருந்து தாவா சொத்தின் பகுதிகளை கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் 17.7.1967ம் தேதி என் பாட்டி லட்சுமியம்மாள் மாரிமுத்து என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். எனவே நான் என் வழக்குரையிலும், பிரமாண பத்திரத்திலும் முரண்பட்ட தேதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

18) என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.9 பட்டா ஆவணம், அதில் குறிப்பு பகுதியில் 2வது கட்டத்தில் தகவல்கள் 12.4.2022ம் தேதி அச்சிடப்பட்டது என்று கண்டுள்ளது என்று சொன்னால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு மேற்படி வா.சா.ஆ.9 தயார் செய்யப்பட்டது என்று சொன்னால், சரியல்ல.

19) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகியவற்றில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்து இல்லாததால் மேற்படி ஆவணங்களும் அவற்றை அடிப்படையாக கொண்டு ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.8 என் தந்தை பேரில் உள்ள பட்டாவும், 1ம் பிரதிவாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல.

(1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.